35

# கம்ப ராமாயணம்

## கையடைப்படலம் - பகுதி II

**10. தசரதன் கௌசிகனை நோக்கி "யான் செய்ய வேண்டிய பணிவிடை யாது?" எனல்.**

உரைசெய்யும் அளவில், அவன் முகம் நோக்கி,
உள்ளத்துள் ஒருவராலும்
கரை செய்ய அரியது ஒரு பேர் உவகைக்
கடல் பெருக, கரங்கள் கூப்பி,
'அரைசு எய்தி இருந்த பயன் எய்தினென்; மற்று
இனிச் செய்வது அருளுக!' என்று,
முரைசு எய்து கடைத் தலையான் முன் மொழிய,
பின் மொழியும் முனிவன், ஆங்கே:

(இ-ள்) உரை செய்யும் அளவின் - (அம்முனிவன் இவ்வாறு) சொன்ன வளவிலே,-முரசு எய்து கடைத்தலையான் - பேரிகைகள் முழங்குகின்ற தலைவாயிலையுடையவனான தசரதச்சக்கரவர்த்தி, - உள்ளத்தின் - மனத்திலே, ஒருவரால் உம் கரைசெய்ய அரியது ஒரு பேர் உவகை கடல் பெருக- எவராலும் அளவிடவொண்ணாத ஒப்பற்ற பெருமகிழ்ச்சியாகிய கடல் பொங்கா நிற்க, கரங்கள் கூப்பி- கைகளைக் குவித்து (அஞ்சலி செய்து கொண்டு), அவன் முகம் நோக்கி - அம்முனிவனது முகத்தைப் பார்த்து, 'அரசு எய்தியிருந்த பயன் எய்தினன் - (தேவரீர் எழுந்தருளப் பெற்றதனால்) அரசாட்சியை அடைந்திருந்ததனாலாகிய பயனைப் பெற்றேன்; இனி செய்வது அருளுக - இப்பொழுது (யான்) செய்ய வேண்டுவதை நியமித்தருள்வீராக' என்று -, முன்மொழிய - முன்னே சொல்ல, - ஆங்கு - அப்பொழுது, முனிவன் விசுவாமித்திரன், பின்மொழியும் - பின்சொல்லுவான்; (எ-று) - அதனை அடுத்த செய்யுளிற் காண்க. மற்று - வினைமாற்று.

**11. 'வேள்விகாத்தற்கு இராமனையனுப்புக' என்று கௌசிகன் கூறல்.**

தருவனத்துள் யான் இயற்றும் தகை வேள்விக்கு
இடையூறா, தவம் செய்வோர்கள்
வெருவரச் சென்று அடை காம வெகுளி என,
நிருதர் இடை விலக்கா வண்ணம்,
"செருமுகத்துக் காத்தி" என, நின் சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத் தந்திடுதி' என உயிர் இரக்கும்
கொடுங் கூற்றின், உளையச் சொன்னான்.



இலவச விநியோகத்திற்காக

(இள்) 'தரு வனத்துள் - (பயனைத்) தவறாது தருகின்ற காட்டிலே, (சித்தாச்சிரமத்திலே) யான் இயற்றும் - நான் செய்யப் போகின்ற, தகை வேள்விக்கு - சிறப்பையுடைய யாகத்துக்கு, இடையூறு ஆ - தடையாக (வந்து) தவம் செய்வோர்கள் வெருவர சென்று அடைகாமம் வெகுளி என - முனிவர்கள் அஞ்சும் படி (அவர்களிடம்) போய்ச் சேருகின்ற காமக்குரோதங்கள் போல, நிருதர் - இராக்கதர்கள், இடை-நடுவிலே, விலக்காவண்ணம் - தவிர்க்காதபடி, 'செருமுகத்து காத்தி - யுத்தத்தில் (நின்று) காப்பாயாக, என - என்று கட்டளையிட்டு, நின் சிறுவர் நால்வரின்உம் கரிய செம்மல் ஒருவனை தந்தீதி - உனது புத்திரர்கள் நால்வருள்ளும் கரு நிறமுடைய ஒப்பற்ற ஸ்ரீ ராமனை (என்னுடன்) அனுப்புவாயாக, என- என்று, உயிர் இரக்கும் கொடுங் கூற்றின் - பிராணனை யாசிக்கின்ற கொடிய யமன் போல, உளைய - (சக்கரவர்த்தியின் மனம்) வருந்தும்படி, சொன்னான், - (விசுவாமித்திரன்) கூறினான்; (எ-று)

**12. அது கேட்டுத் தசரதன் மிக வருந்துதல்.**

எண் இலா அருந் தவத்தோன் இயம்பிய சொல்
மருமத்தின் எறி வேல் பாய்ந்த
புண்ணில் ஆம் பெரும் புழையில் கனல் நுழைந்தா
லெனச் செவியில் புகுதலோடும்,
உள் நிலாவிய துயரம் பிடித்து உந்த,
ஆர் உயிர் நின்று ஊசலாட,
கண்இலான் பெற்று இழந்தான் என உழந்தான்
கடுந் துயரம் கால வேலான்.

(இ-ள்) எண் இலா அருந் தவத்தோன் - அளவில்லாத அருமையான தவத்தையுடையவனான விசுவாமித்திரன், இயம்பிய - (இங்ஙனஞ்) சொன்ன, சொல் - வார்த்தையானது, மருமத்தின் எறி வேல் பாயந்த புண்ணில் ஆம் பெரும் புழையில் கனல் நுழைந்தால் என - மார்பிலே (பகைவன்) எறிந்த வேலாயுதம் பாய்ந்ததனாலாகிய புண்ணிலுண்டான பெரிய துவாரத்திலே கொள்ளிக்கட்டை நுழைந்தாற் போல் (மிக வருத்தந்தரும்படி) செவியில் புகுதலோடுஉம் - (சக்கரவர்த்தியின்) காதுகளில் நுழைந்தவுடனே காலன் வேலான் - (பகைவர்க்கு) யமனையொத்த வேலாயுதத்தையுடையவனான அத்தசரதன், உள் நிலாவிய துயரம் பிடித்து உந்த - மனத்திலுண்டான துன்பம் பிடித்து வெளியே தள்ளுதலால், ஆர் உயிர் நின்று ஊசல்ஆட - அரிய உயிரானது ஊஞ்சலாடுவதுபோலப் போவதும் வருவதுமாயிராநிற்க, கண்இலான் பெற்று இழந்தால் என - பிறவிக் குருடன் கண்களைப் பெற்று (மீண்டும்) இழந்தாற் போல, கடுந் துயரம் உழந்தான் - மிக்க துன்பத்தை அனுபவித்தான்; (எ-று)

**13. தசரதன் தானே வந்து வேள்விகாப்பதாகக் கூறுதல்.**

தொடைஊற்றின் தேன் துளிக்கும் நறுந் தாரான்
ஒரு வண்ணம் துயரம் நீங்கி,
'படையூற்றம் இலன்; சிறியன் இவன்; பெரியோய்!
பணி இதுவேல், பனி நீர்க் கங்கை
புடைஊற்றும் சடையானும், புரந்தரனும்,
நான்முகனும், புகுந்து செய்யும்
இடையூற்றுக்கு இடையூறாய், யான் காப்பென்,
பெரு வேள்விக்கு எழுக! என்றான்.



இலவச விநியோகத்திற்காக

(இ-ள்) (பின்பு), தொடைஊற்றின் தேன்துளிக்கும் நறுந்தாரான் - தேன்கூடு (தேன்) ஊற்றுவது போல (இடையறாது) தேனைச் சிந்துகின்ற வாசனை வீசும் மாலையையுடையவனான சக்கரவர்த்தி ஒரு வண்ணம் துயரம் நீங்கி - ஒருவாறு துன்பஞ்சிறிது தணியப்பெற்று, - (முனிவனை நோக்கி,) - 'பெரியோய்' (அறிவொழுக்கங்களாற்) பெரியவனே! இவன் - இந்த இராமன், சிறியன் - இளம்பிராயமுடையவன்: படைஊற்றும் இலன் - ஆயுதத் தேர்ச்சியில்லாதவன் (ஆதலால் இவன் வேண்டா) இது பணி ஏல் - (அரக்கர் விலக்காதபடி வேள்வி காத்தலாகிய) இதுவே (நினது) கட்டளையானால், பனி நீர் கங்கைபுடை ஊற்றும் சடையான்உம் - குளிர்ந்த நீரையுடைய கங்கா நதியை ஒரு பக்கத்திலே ஒழுகவிட்ட (கபர்த்தமென்னுஞ்) சடைமுடியையுடையவனான சிவபிரானும், நான்முகன்உம் - பிரமனும், புரந்தரன்உம். இந்திரனும், புகுந்து செய்யும் - (தனித்தனியேனும் ஒருங்கு கூடியேனும்) வந்து செய்யும், இடையூற்றுக்கு, தடைகளுக்கும், இடையூறுஆ - தடையுண்டாக, யான் காப்பென் - அடியேன் (வேள்வியைக்) காத்திடுவேன் பெருவேள்விக்கு எழுக - பெரிய யாகத்தைச் செய்தற்கு எழுந்தருள்க, என்றான் - என்று கூறினான். (எ-று)

**14. கௌசிகனது பெருங் கோபமும், அதனாலுண்டாகிய குழப்பமும்.**

என்றனன் என்றலும், முனிவோடு எழுந்தனன்:, மண்
படைத்த முனி 'இறுதிக் காலம்
அன்று' என, 'ஆம்' என இமையோர் அயிர்த்தனர் மேல்
வெயில் கரந்தது; அங்கும் இங்கும்
நின்றனவும் திரிந்தன; மேல் நிவந்த கொழுங்
கடைப் புருவம் நெற்றி முற்றச்
சென்றன; வந்தது நகையும் சிவந்தன கண்
இருண்டன; போய்த் திசைகள் எல்லாம்.

(இள்) என்றனன்- என்று (முனிவன் கருத்துக்கு மாறாகத் தசரதன்) சொன்னான்; என்றலும் - என்று சொன்னவளவிலே, மண் படைத்த முனி - உலகங்களை (வேறாகச்) சிருஷ்டிக்கத் தொடங்கிய விசுவாமித்திரன், முனிவோடு எழுந்தனன் - கோபத்தோடு எழுந்திருந்தான்; (அப்பொழுது அதனை நோக்கி) இமையோர் - தேவர்கள், இறுதி காலம் ஆம் என அன்று என - உலகமுடியுங்காலம் இதுவாகுமென்றும் அன்றென்றும், அயிர்த்தனர் - சந்தேகித்தார்கள்; மேல் வெயில் கரந்தது - ஆகாயத்தில் விளங்குகின்ற சூரியனும் மறைந்து போயிற்று; அங்குஉம் இங்குஉம் நின்றனஉம் திரிந்தன - அவ்வுலகத்தும் இவ்வுலகத்தும் (எவ்வுலகத்தும்) நிலையாய் நின்ற அசரங்களும் சுழன்றன கொழுங்கடை புருவம் மீ நிவந்த நெற்றி முற்ற சென்றன - (அக்கௌசிக முனிவனது) செழுமையான புருவ நுனிகள் மேலேறியனவாய் நெற்றி முழுவதும் பரந்தன; நகைஉம் வந்தது - (அம்முனிவனுக்குக் கோபத்தாற்) சிரிப்பும் உண்டாயிற்று; கண் - கண்கள், சிவந்தன - திசைகள் எல்லாம் போய் இருண்டன - எல்லாத் திக்குகளும் இருண்டு போயின; (எ-று)

**15. இரண்டு கவிகள் - வசிட்டன் 'இராமனை முனிவனுடன் அனுப்புக' என்பதைத் தெரிவிக்கும்.**

கறுத்த மா முனி கருத்தை உன்னி, 'நீ
பொறுத்தி' என்று அவற் புகன்று, 'நின் மகற்கு
உறுத்தல் ஆகலா உறுதி எய்தும் நாள்
மறுத்தியோ?' எனா, வசிட்டன் கூறினான்:


இலவச விநியோகத்திற்காக

(இ-ள்) (இவ்வாறு விசுவாமித்திரன் பெருஞ்சினங் கொண்டபோது), - வசிட்டன்-, கறுத்த மாமுனி கருத்தை - சினந்த அந்த விசுவாமித்திர மகா முனிவனது எண்ணத்தை, உன்னி - அறிந்து, - 'நீ, - பொறுத்தி - பொறுத்தருள்வாயாக' என்று - அவன் புகன்று - அம்முனிவனை நோக்கிச் சொல்லி - (உடனே தசரதனை நோக்கி), - 'நின் மகற்கு - உனதுகுமாரனுக்கு, உறுத்தல் ஆகா - (பிறரால்) அடைவித்தற்குக் கூடாத, உறுதி - பெருநன்மைகள், எய்தும் நாள் - (தாமாக) வந்து சேர்கிறகாலத்தில், மறுத்தி ஓ - (அவற்றைத்) தடுக்கக் கடவையோ? எனா - என்று, கூறினான்; (எ-று)

| | |
|---|---|
| **16.** | பெய்யும் மாரியால் பெருகு வெள்ளம் போய்<br>மொய் கொள் வேலைவாய் முடுகும் ஆறுபோல்,<br>ஐய! நின் மகற்கு அளவு இல் விஞ்சை வந்து<br>எய்து காலம் இன்று எதிர்ந்தது - என்னவே. |

(இ-ள்) 'ஐய - அரசனே! பெய்யும் மாரியால் பெருகு வெள்ளம் பெய்கின்ற மழையினாற் பெருகுகின்ற வெள்ளங்கள், போய், - மொய் கொள் வேலைவாய் - பெருமையைக்கொண்ட கடலிலே, முடுகும் ஆறுபோல் - விரைந்து சேரும் விதம்போல, நின்மகற்கு - உனது குமாரனாகிய ஸ்ரீராமனுக்கு, அளவுஇல் விஞ்சை - அளவில்லாத வித்தைகள், வந்து எய்து-வந்து சேரும்படியான, காலம் - நற்காலம், இன்று எதிர்ந்தது ஆம் - இன்றைக்கு நேர்ந்ததாகும்,' என்றான் - என்றும் (வசிட்டன்) சொல்லினான் (எ-று).

**17. உடனே தசரதன் உடன்பட்டு இராமனை வரவழைத்தல்.**

| |
|---|
| குருவின் வாசகம் கொண்டு, கொற்றவன்<br>'திருவின் கேள்வனைக் கொணர்மின், சென்று' என, -<br>'வருக என்றனன்' என்னலோடும், வந்து<br>அருகு சார்ந்தனன், அறிவின் உம்பரான். |

(இ-ள்) குருவின் வாசகம் கொண்டு - (இங்ஙன் கூறிய) குல குருவாகிய வசிட்டனது வார்த்தையை ஏற்றுக்கொண்டு, - கொற்றவன் - வெற்றியையுடையவனான தசரதன், - (ஏவலாளரை நோக்கி, 'நீங்கள்), சென்று திருவின் கேள்வனை கொணர்மின் - இலக்குமி கணவனான ஸ்ரீராமனை அழைத்துக்கொண்டு வாருங்கள், என- என்று கட்டளையிட, (அவர்கள் உடனே இராமனிடஞ் சென்று), வருக என்றனன் என்னலோடும் - (சக்கரவர்த்தி உம்மை) வரவேண்டுமென நியமித்தான்' என்று சொன்னவளவிலே, அறிவின் உம்பரான் - யாவர் அறிவையும் கடந்துள்ளவனான ஸ்ரீராமன், அருகு வந்து சார்ந்தனன் (தந்தையின்) அருகில் வந்து சேர்ந்தான்; (எ-று)

**18. இராமனை இலக்குமணனுடன் தசரதன் கௌசிகனிடம் ஒப்பித்தல்.**

| |
|---|
| வந்த நம்பியைத் தம்பிதன்னொடும்<br>முந்தை நான்மறை முனிக்குக் காட்டி,நல்<br>தந்தை நீ, தனித் தாயும் நீ, இவர்க்கு<br>எந்தை! தந்தனென்; இயைந்த செய்க! - என்றான். |



இலவச விநியோகத்திற்காக

(இ-ள்) (உடனே தசரதன்),- தம்பி தன்னொடும் - இலக்குமணனுடனே, வந்த நம்பியை - (தன்னருகில்) வந்த ஸ்ரீராமனை, முந்தை நால் மறை முனிக்குக் காட்டி- அநாதியான நான்கு வேதங்களிலும் வல்ல விசுவாமித்திர முனிவனுக்குச் சுட்டிக்காண்பித்து, - எந்தை - எமது தலைவனே! இவர்க்கு - இவ்விளங்குமாரர்க்கு, நல் தந்தை நீ - நல்லதந்தையும் நீயே; தனி தாய் உம் நீ- ஒப்பற்ற தாயும் நீயே; தந்தனன் - (இவர்களை உன்னிடம்) ஒப்பித்தேன்; இயைந்த செய்க - (இவர்கட்கு) ஆகவேண்டிய அநுகூலங்களைச் செய்தருள்வாயாக; என்றான்.- என்று சொல்லி (அடைக்கலமாக)க் கொடுத்தான்; (எ-று)

**19. கௌசிகன் மகிழ்ச்சியோடு அவர்களுடன் புறப்படல்.**

கொடுத்த மைந்தரைக் கொண்டு, சிந்தை முந்து
எடுத்த சீற்றம் விட்டு, இனிது வாழ்த்தி, 'மேல்
அடுத்த வேள்வி போய் முடித்தும் நாம் - எனா,
நடத்தல மேயினான், நவைக்கண் நீங்கினான்.

(இ-ள்) (உடனே) நவைக்கண் நீங்கினான் - (காமம் முதலிய) குற்றங்களினின்று நீங்கியவனான விசுவாமித்திரன், கொடுத்த மைந்தரை கொண்டு - (தசரதன்) தந்த குமாரர்களைப் பெற்றுக் கொண்டு, சிந்தை முந்து எடுத்த சீற்றம் விட்டு - மனத்திலே முன்பு மிகுதியாகக் கொண்ட கோபத்தை யொழித்து, இனிது வாழ்த்தி - தசரதனை நன்றாக ஆசீர்வதித்து, - மேல் - பின்பு, - நாம் போய் அடுத்த வேள்வி முடித்தும் எனா - 'நாம் சென்று (செய்தற்கு) அடுத்த யாகத்தை(ச் செய்து) முடிப்போம்' என்று (குமாரரை நோக்கிச்) சொல்லி, நடத்தல் மேயினான் - செல்லுதலைப் பொருந்தினன் (எ-று)

**20. இராமன் ஆயுதங்களை எடுத்துக் கொள்ளுதல்.**

வென்றி வாள் புடை விசித்து மெய்ம்மைபோல்
என்றும் தேய்வுறாத் தூணி யாத்து, இரு
குன்றம் போன்று உயர் தோளில், கொற்ற வில்
ஒன்று தாங்கினான் உலகம் தாங்கினான்.

(இ-ள்) (அப்பொழுது), - உலகம் தாங்கினான் - எல்லாவுலகங்களையும் காத்தருளுங்கடவுளான ஸ்ரீராமன், வென்றி வாள் புடை விசித்து - வெற்றியைத் தரவல்ல உடைவாளை இடைப்புறத்திலே கட்டிக்கொண்டு, இரு குன்றம் போன்று உயர் தோளில் - இரண்டு மலைகள் போல உயர்ந்துள்ள இரண்டு தோள்களிலும், மெய்ம்மை போல் என்றும் தேய்வு உறா தூணியாத்து - சத்தியம் என்கிற தருமம் (எப்போதும் பயன் குறைபடாது) போல எப்பொழுதும் (அம்புகள்) குறைபடுதலில்லாத (இரண்டு) அம்பறாத்தூணிகளைக்கட்டி, கொற்றம் வில் ஒன்று தாங்கினான் - வெற்றியைத் தருகிற ஒருவில்லை (இடக்கையிற்) பிடித்துக் கொண்டான் (எ-று)

**21. இராமன் இலக்குமணனுடன் முனிவன் பின்னே செல்லுதல்.**

அன்ன தம்பியும் தானும், ஐயன் ஆம்
மன்னன் இன் உயிர் வழிக்கொண்டாலென
சொன்ன மா தவன் - தொடர்ந்து சாயைபோல்,
பொன்னின் மா நகர்ப் புரிசை நீங்கினான்.



இலவச விநியோகத்திற்காக

(இ-ள்) (ஸ்ரீராமன்),-அன்ன தம்பிஉம் தான்உம் - அப்படிப்பட்ட (தன்னைப்போலவே வாளும் தூணிகளும் வில்லும் தரித்த) தம்பியும் தானுமாக, ஐயன் ஆம் மன்னன் இன் உயிர் வழிக்கொண்டால் என - தந்தையாகிற சக்கரவர்த்தியினது இனிய உயிரானது வெளியிற் பிரயாணப்பட்டாற் போல, - சொன்ன மா தவன் சாயை, போல்- (கீழ்க்) கூறிய விசுவாமித்திர மகா முனிவனை விடாதுதொடர்ந்து செல்லுகிற நிழல் போல, தொடர்ந்து-, பொன்னின் மா நகர் புரிசை நீங்கினான் - பொன்மயமான பெரிய அயோத்தியாநகரத்தின் மதிலைக் கடந்து சென்றான் (எ-று)